# 5 இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் தேசிய சுதந்திர இயக்கமும்



## அறிமுகம்

பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதுவரை இந்நாட்டில் நிலவி வந்த மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் வரையிலான 133 ஆண்டுகள் பிரித்தானியர் இந்நாட்டை ஆட்சி செய்தனர்.

இலங்கையர் இடைவிடாது முன்னெடுத்துச்சென்ற போராட்டங்களின் காரணமாக காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை வழங்கவேண்டிய தேவை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. அவ்வரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலம் சுதேசிகளுக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் திருப்தியடையாத இலங்கையர் தொடர்ந்தும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்களின் விளைவாகவே 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் இடம்பெற்ற அரசியல் போராட்டங்கள் மற்றும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் போன்றன தொடர்பாக இந்த அத்தியாயத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது.

## 5.1 கோல்புறூக் - கமரன் அரசியல் திட்டம்

1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து முழு நாடும் பிரித்தானியர் ஆதிக்கத்துக்குட்பட்டது. அன்று முதல் பிரித்தானியர் இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, மலையகத்தையும் கரையோரப் பிரதேசங்களையும் வெவ்வேறாக ஆட்சிசெய்தல், பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த அதிகாரிகளின் சம்பளம் மற்றும் வசதிகள் ஆகியவற்றிற்கு பாரிய செலவுச் சுமையைச் சுமக்கவேண்டி ஏற்பட்டது. இக்காரணங்களால் 1828 ஆம் ஆண்டளவில் அரச வருவாயை விடச் செலவினங்கள் துரிதமாக அதிகரித்துச் சென்றன. இதனால் இந்நாட்டின் அரச செலவுகளை ஈடுசெய்ய பிரித்தானிய அரசின் நிதியைச் செலவிட வேண்டிய நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. ஆயினும் குடியேற்ற நாடுகளின் நடவடிக்கைகளுக்காகத் தாய் நாட்டின் நிதியைச் செலவிடுவது இதுவரை பிரித்தானியாவின் கொள்கையாக இருக்கவில்லை. ஆகையால் இலங்கைக்கு வந்து இந்நாட்டின் வருமானம், செலவினங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆட்சி முறையின் பலவீனங்களைத் தேடியறிந்து தேவையான சீர்திருத்த ஆலோசனைகளை முன்வைப்பதற்காக குடியேற்ற நாட்டுச் செயலாளரால் விசேட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. W. M. G. கோல்புறூக் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழு கோல்புறூக் ஆணைக்குழு என அழைக்கப்படுகின்றது. கோல்புறூக்கிற்குப் பொருளாதார மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பாகத் தேடியறியும் பொறுப்பு வழங்கப்பட்டது, இந்நாட்டின் நீதிசார் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவசியமான ஆலோசனைகளை முன்வைப்பதற்காக சார்ள்ஸ் கே கமரன் என்பவர் பின்னர் நியமிக்கப்பட்டார்.

### கோல்புறூக் அரசியல் திட்டத்தின் விசாரணைக்குட்பட்ட துறைகள்

அரச வருமான வழிகளும் மற்றும் செலவின நடவடிக்கைகளும் - W. M. G. கோல்புறூக்

நீதித்துறை - சார்ள்ஸ் கே கமரன்

கோல்புறூக் மற்றும் கமரன் ஆகிய இருவரும் இந்நாட்டிற்கு வருகை தந்து இலங்கையின் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை பற்றிய விடயங்களை ஆராய்ந்து பெரும்பாலான இலங்கையரின் கருத்துக்களைக் கேட்டிறிந்து தமது சிபாரிசுகள் அடங்கிய ஆலோசனைகளை முன்வைத்தனர். 1833 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த அது கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

### கோல்புறூக் சீர்திருத்தங்களின் விசேட பண்புகள்

- சட்டவாக்க, சட்ட நிருவாக சபைகள் தோற்றுவிக்கப்பட்டமை.
- கண்டி, கரையோரப் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் வகையிலான ஆட்சி முறையொன்று தோற்றுவிக்கப்பட்டமை.
- நிருவாக நடவடிக்கைகளுக்காக இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டமை.
- கட்டாய இராஜகாரிய முறைமை நீக்கப்பட்டமை.


❖ ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை
❖ அடுத்ததாக நாம் மேலே குறிப்பிட்ட பண்புகளை விரிவாகப் பார்ப்போம்.

**சட்டவாக்க, சட்ட நிருவாக சபைகள் தோற்றுவிக்கப்பட்டமை.**

கோல்புறூக் ஆணைக்குழு இந்நாட்டிற்கு வரும்போது சட்டவாக்க, சட்ட நிருவாக, நீதித்துறை அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடம் குவிந்து கிடந்தன. இந்நிலைமை கோல்புறூக்கின் விமர்சனத்திற்கு உள்ளானதோடு ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பதற்காகச் சட்டவாக்க மற்றும் சட்ட நிருவாக சபைகளைத் தோற்றுவிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

**சட்டவாக்க சபை**

கோல்புறூக்கின் ஆலோசனைப்படி சட்ட உருவாக்கத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சட்டவாக்கசபை 15 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் உத்தியோக சார்புள்ள, உத்தியோகசார்பற்ற எனும் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அதன்படி உத்தியோக சார்புள்ள அங்கத்தவர்கள் 9 பேர் இருந்ததோடு அவர்கள் அதிகாரபூர்வமாகத் தெரிவான அரசின் உயர் அதிகாரிகள் ஆவர். உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் 6 பேர் இருந்ததோடு அவர்கள் இன அடிப்படையில் ஆளுநரின் நியமனம் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்களுள் ஐரோப்பியர் மூவரும் சிங்களவர் , தமிழர் , பறங்கியர் என வெவ்வேறு இனங்கள் சார்பாகத் தெரிவான அங்கத்தவர்கள் மூவரும் உள்ளடங்குவர். சட்டவாக்க சபையில் ஆளுநருக்கே பிரதான இடம் வழங்கப்பட்டிருந்தது. கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் ஒவ்வொரு இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவ முறையானது எதிர்காலத்தில் இந்நாட்டினுள் வெவ்வேறு இனத்தவர் மத்தியில் பேதங்கள் ஏற்படக் காரணமாய் அமைந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.




1833 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை காலத்திற்குக் காலம் சீர்திருத்தத்திற்கு உள்ளானதன் காரணமாக இலங்கையரின் கைகளுக்குக் கிடைத்த அதிகாரங்களின் அளவும் அதிகரித்து அதனூடாக இலங்கை எதிர்காலத்தில் பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிச் செல்வதற்கான அத்திவாரமும் இடப்பட்டது. இதன் காரணமாக கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் சட்டவாக்க சபை அறிமுகப்படுத்தப்பட்டமையானது இந்நாட்டு அரசியல் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாகக் கருத முடியும்.

சட்ட நிருவாக சபை

கோல்புறூக்கின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட சட்ட நிருவாக சபை ஆளுநர் மற்றும் அரச அளவையாளர் போன்ற அரசின் உயர் அதிகாரிகள் சிலரை உள்ளடக்கியிருந்தது. இங்கு ஆளுநருக்கு பிரதான இடம் வழங்கப்பட்டிருந்தது. நாட்டின் சகல நிருவாக நடவடிக்கைகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆளுநர் இச்சபையின் கருத்துக்களைக் கேட்டறிவது அவசியமாகும்.

❖ **கரையோரத்தையும் கண்டியையும் ஒன்றிணைத்து ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தமை**

1815 ஆம் ஆண்டு பிரித்தானியர் கண்டி இராசதானியைக் கைப்பற்றியதன் பின் கண்டியையும் கரையோரத்தையும் வெவ்வேறாக ஆட்சி செய்யும் முறையொன்றி னையே பின்பற்றினர். இம்முறை அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வதற் குக் காரணமாய் அமைந்தமை சுட்டிக்காட்டப்பட்டு அவ்விரு பிரதேசங்களையும் இணைக்கும் வகையிலான ஒன்றிணைந்த ஆட்சி முறையொன்றினைக் கொண்டு வர கோல்புறூக் ஆலோசனையை முன்வைத்தார்.

❖ **நிருவாக நடவடிக்கைகளுக்காக முழு நாட்டையும் ஐந்து மாகாணங்களாகப் பிரித்தமை**

1833 ஆம் ஆண்டு வரை நிருவாக நடவடிக்கைகளுக்காக இலங்கை 16 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மாகாணங்கள் எண்ணிக்கையளவில் அதிகரித்திருந் தமையால் அதன் அதிகாரிகளின் வசதிக்காகப் பாரியளவு பணத்தைச் செலவிட வேண்டியிருந்தமையால் அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வதாக சுட்டிக் காட்டிய கோல்புறூக், செலவினங்களைக் குறைப்பதற்காக ஆட்சிப் பிரதேசங்களை ஐந்தாகப் பிரித்து அந்த மாகாணங்களுக்கு ஐந்து நிருவாக மையங்களையும் நிறுவுவதற்கான ஆலோசனையை முன்வைத்தார். அம்மாகாண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு அரசாங்க அதிபரை நியமிப்பதற்கும் தீர்மானம் மேற்கொண்டார்.

**கோல்புறூக்கின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட மாகாணங்களும் அவற்றின் நிருவாக மையங்களும்**

| மாகாணங்கள் | நிருவாக மையங்கள் |
|---|---|
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் |
| தென் மாகாணம் | காலி |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை |
| மேல் மாகாணம் | கொழும்பு |
| மத்திய மாகாணம் | கண்டி |

❖ **கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை**

நாட்டில் இருந்த வயதுவந்த ஆண்கள் அனைவரும் வருடத்தில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அரசுக்கு இலவசமாகச் சேவையாற்றுதல் கட்டாய சேவை இராஜகாரிய முறை எனப்பட்டது. முற்காலத்தல் அரசின் பொதுவேலைகளுக்காக நாட்டுப் பிரசைகளிடமிருந்து உழைப்பினைப் பெற்றுக்கொள்ள இராஜகாரிய முறை பயன்படுத்தப்பட்டது. அவர்கள் வாழ்ந்த கிராமங்களில் குளக்கட்டு, கால்வாய், பாதைகள் புனரமைப்பது போன்ற பொது வேலைகள் இதன் கீழ் மேற்கொள்ளப் பட்டன. பணம் செலுத்தாது பெற்றுக்கொள்ளப்பட்ட இச்சேவை பிரசைகளின் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டி அம்முறையை நீக்குமாறு கோல்புறூக் ஆலோசனையை முன்வைத்தார்.

**ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை**

கோல்புறூக் வருகைதந்த காலப் பகுதியில் அரச செலவினங்கள் அதிகரிப்பதற்கு ஏதுவான பிரதான காரணி இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளுக்கென அதிகாரிகள் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்டமையாகும். அவர்களின் சம்பளம், தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கு அரசு அதிக தொகைப் பணத்தைச் செலவிடவேண்டியிருந்தது. எனவே அரச செலவினங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டுமாயின் வெளிநாட்டு அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் எனும் ஆலோசனையை கோல்புறூக் முன்வைத்தார். அதற்காக ஆங்கில மொழியைப் பரவலடையச் செய்யவேண்டிய தேவையொன்றும் எழுந்தது.

சுதேசிகள் மத்தியில் பணம் செலுத்திக் கல்வியைப் பெறக்கூடியவர்களுக்கு ஆங்கில மொழியில் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் நிருவாக நடவடிக் கைகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்களைப் பெற முடியுமென கோல்புறூக் கருதினார்.

## 5.2 இலங்கையரின் போராட்டங்கள்

1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்ததன் பின் அவ்வாட்சி முறையில் சிற்சில மாற்றங்களை வேண்டி முதன் முதலில் போராட்டமொன்றை முன்னெடுத்தவர்கள் இந்நாட்டில் இருந்த ஐரோப்பியர்களேயாவர். இவர்கள் பெருந் தோட்டத்துறை நடவடிக்கைகளுக்கென இலங்கைக்கு வந்து மலைநாட்டுப் பிரதே சங்களில் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட்டிருந்த செல்வந்தர்களாவர். அவர்களது தோட்டங்கள் அமைந்திருந்த பிரதேசங்களுக்கான பாதை வசதிகளை விருத்திசெய்து கொள்ளுதல், தபால், தகவல் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், மேலும் பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான ஏனைய வசதிகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றவற்றுக்கான பணத்தை சீர்திருத்தத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்துகொள்ளும் தேவையொன்று அச்சமயத்தில் எழுந்திருந்தது. இந்த ஐரோப்பிய பிரசைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகச் சட்டவாக்க சபையில் உத்தியோக

சார்பற்ற பிரதிநிதிகள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இச்சீர்திருத்தத்தில் உத்தியோக சார்பற்றோரை விட உத்தியோக சார்புள்ளோர் பெரும்பான்மையாக இருந்தமையாலும் அவர்களுக்குக் கிடைத்திருந்த அதிகாரங்கள் போதுமானவையாக இல்லாமையாலும் அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்களை முன்னெடுத்துச் செல் வதற்கு 1865 ஆம் ஆண்டு இலங்கையர் சங்கம் எனும் பெயரிலான அமைப்பொன்று தோற்றுவிக்கப்பட்டது. வில்லியம் டிக்பி, ஜோர்ஜ் வோல் போன்றோர் அப்போராட் டங்களில் முன்னணி வகித்த தலைவர்களாவர்.

கோல்புறுக் சீர்திருத்தங்களின் பின் இந்நாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமையாலும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதார முறைமையொன்று தோற்றம் பெற்றமையாலும் இலங்கையருக்குப் பல்வேறு வியாபார நடவடிக்கை களில் ஈடுபட்டதன் மூலம் பணம் சம்பாதித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத்துறை நடவடிக்கைகள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், காரீயக் கைத்தொழில் போன்ற வியாபார நடவடிக்கை களில் ஈடுபட்டதன் மூலம் பணம் சம்பாதித்துக்கொண்ட இலங்கையர் குழு ஒன்று உருவானது. அவ்வாறு உருவான இலங்கைச் செல்வந்தர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் உயர் கல்வியைப் பெற்றுக்கொடுத்ததன் விளைவாக ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கமொன்று தோற்றம் பெற்றது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இம்மத்தியதர வர்க்கத்தினர் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர். இது இலங்கையரின் அரசியல் போராட்டங்களின் ஆரம்பமாகக் கருதப்படுகின்றது.

ஆரம்ப காலப்பகுதியில் அரசியல் போராட்டங்களுக்குத் தலைமை வகித்த மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ், H. G. C பெரேரா போன்ற தலைவர்கள் முன்ன ணியில் இடம் வகிக்கின்றனர். இவ்வகையில் கல்விகற்ற இலங்கையர் தலைமையில் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக ஆரம்ப காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கங்களுள் கரையோர உற்பத்தியாளர் சங்கம், சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச் சங்கம் போன்றன முக்கிய இடம்பெறுகின்றன.


கல்விகற்ற இலங்கையர் மத்தியில் அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றின் தேவை தொடர்பாக விரிவான காரணங்கள் அடங்கிய கோரிக்கையொன்றினை 1908 ஆம் ஆண்டு முதன்முதலாகக் குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் கையளித்தவர் சேர் ஜேம்ஸ் பீரிஸ் ஆவார். அதன்பிறகு பல்வேறுபட்ட அமைப்புக்களாலும் நபர்களாலும் மேலும் அவ்வாறான கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டன. அக்கோரிக்கைகள் ஊடாக இலங்கையர் முன்வைத்த ஆலோசனைகள் சில பின்வருமாறு,

- சட்டவாக்க சபையில் உத்தியோக சார்பற்றோர் தொகையை அதிகரித்தல்
- சட்டவாக்க சபைக்கு வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

## 5.3 குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1910

1910 ஆம் ஆண்டு இலங்கையின் ஆளுநரான ஹென்றி மக்கலம் என்பவரின் ஆலோசனையின் பேரில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் குறூ பிரபுவினால் 1910 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்று இந்நாட்டிற்கு வழங்கப்பட்டது. இதுவே குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எனப் பட்டது. இவ்வரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின்கீழ் சட்டவாக்க சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் உத்தியோக சார்புள்ளோர் 11 பேரும் உத்தியோக சார்பற்றோர் 10 பேரும் உள்ளடங்குவர். இவ்வுத்தியோக சார்பற்ற அங்கத்தவர் 10 பேரில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் 6 பேரும் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் 4 பேரும் (ஐரோப்பியர் 2, பறங்கியர் 1 கல்வி கற்ற இலங்கையர் ஒருவர்) எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

**குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1910**




மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன்படி சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்கையில் வாக்குரிமை மூலம் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை, கல்வி கற்ற இலங்கையர் சார்பாக ஒருவருக்கு அங்கத்துவம் கிடைத்தமை போன்றன இவ்வரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் சிறப்பம்சங்களாகும்.

கல்வி கற்ற இலங்கையர் சார்பாக ஒருவருக்கு அங்கத்துவம் கிடைக்கப்பெற்றமை இந்நாட்டு மத்தியதர வர்க்கத்தினருக்கு சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. இலங்கையர் சார்பில் இந்நியமனத்திற்காக முதன்முதல் தெரிவுசெய்யப்பட்டவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார்.


## 5.4 இலங்கை தேசிய சங்கம்



உரு 5.1 சேர் பொன்னம்பலம் அருணாசலம்

குறா - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கு முன் பல்வேறு இயக்கங்களாலும் மற்றும் நபர்களாலும் தனித் தனியே குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டமைபற்றி மேலே குறிப்பிடப்பட்டது. சிற்சிறு அமைப்புகள் ஊடாகக் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் குடியேற்ற நாட்டு செயலாளருக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியாதென்பதையும் இலங்கையரனைவரும் ஒன்றுபட்டு சக்திமிக்க குரலெழுப்ப வேண்டுமாயின் அனைவரினதும் ஆதரவைப் பெற்ற பொது அமைப்பொன்றினைத் தோற்றுவிப்பது அவசியம் என்பதனையும் மத்தியதர வர்க்கத்தினர் உணர்ந்து கொண்டனர். இந்தியர்கள் இந்திய தேசிய சங்கத்தினை தோற்றுவித்து ஒன்றுபட்டு செயலாற்றிய விதம் இங்குள்ள இலங்கை புத்திஜீவிகளுக்கு முன்னுதாரணமாக அமைந்தது. இதன் விளைவாகவே 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் அரசியல் சீர்திருத்தப் போராட்ட இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இலங்கை தேசிய சங்கத்தின் முதல் தலைவர் பதவிக்குத் தெரிவானார்.

இலங்கை தேசிய சங்கத்தில் இணைந்துகொண்ட சிறு அமைப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.



சிங்கள, தமிழ், முஸ்லிம் என இந்நாட்டு மக்களை இனரீதியாகப் பிரதிநிதித்துவப் படுத்திய அமைப்புக்கள் பல இலங்கை தேசிய சங்கம் எனும் பெயரில் பொது இலக்கொன்றை நோக்கி ஒன்றுபட்டமை இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கிய சந்தர்ப்பமொன்றாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையர் கைகளுக்கு அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சக்திமிக்க போராட்டங்களை முன்னெடுப்பதே இலங்கை தேசிய சங்கத்தின் பிரதான குறிக்கோளாய் அமைந்தது. இதனடிப்படையில் அடுத்துவரும் அரசியல் சீர்திருத்தங்களின்போது சட்டவாக்க சபையில் இலங்கை பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல், அவர்களின் அதிகாரங்களை மேம் படுத்திக் கொள்ளுதல், வாக்குரிமை மூலமாகப் பெரும்பாலான அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல், தேசியத் தலைவர்கள் ஆட்சி நடவடிக்கைகளில் கூடுதலான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றன இச்சங்கத்தின் நோக்கங்களுள் பிரதானமானவையாகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இலங்கை தேசிய சங்கம் பின்பற்றிய நடைமுறைகள் போராட்டவாதமாக அன்றி அகிம்சைவாதப் பண்புகளை வெளிக்காட்டியனவாய் அமைந்தன. பிரித்தானிய அரசிடம் மனுக்களைச் சமர்ப்பித்தல், குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கோரிக்கைகளை முன்வைத்தல், கூட்டங்களை நடத்தி மக்களை அறிவூட்டுதல், சட்டவாக்க சபைக்குள் வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்துதல், ஆளுநரின் அபிமானத்தை வென்றுகொள்ளப் பிரயத்தனம் மேற்கொள் ளல், பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதன் மூலம் சீர்திருத்தங்களின் தேவைப்பாட்டை விளக்குதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

## 5.5 மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1920


1910 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தால் திருப்தி கொள்ளாத இலங்கையர் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்ததன் விளைவாக 1920 ஆம் ஆண்டு மற்றுமொரு அரசியல் யாப்புச் சீர்திருத்தம் இந்நாட்டுக்குக் கிடைத்தது. அப்போதைய இலங்கை ஆளுநரான வில்லியம் மனிங் என்பவரின் ஆலோசனையின் பேரில் முன்வைக்கப்பட்ட இச்சீர்திருத்தம் மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

### சட்டவாக்க சபை

இச்சீர்திருத்தத்தின் ஊடாக சட்டவாக்க சபை அங்கத்தவர் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. அவர்களுள் 14 பேர் உத்தியோக சார்புள்ளோராகவும் 23 பேர் உத்தியோக சார்பற்றோராகவும் காணப்பட்டனர். உத்தியோக சார்பற்றோர் 23 பேரில் 7 பேர் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். எஞ்சிய 16 பேரும் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்டமை இச்சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாகும்.

1920 ஆம் ஆண்டு சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்கள் தெரிவான விதம் கீழே காட்டடப்பட்டுள்ளது.

**அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1920**




இச்சீர்திருத்தத்தின்படி சட்டவாக்க சபையில் உத்தியோக சார்புள்ளோரை விட உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரித்துக் காணப்பட்டாலும் முக்கிய வாக்கெடுப் பொன்றின்போது உத்தியோக சார்புள்ள 14 பேருடன் நியமனம் மூலம் தெரிவான 7 பேரும் இணைவதால், வாக்குரிமை மூலம் தெரிவான 16 பேருக்கும் மேலான அதிக வாக்குகள் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஆளுநருக்கு இருந்தது.


## மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1924

1920 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையரின் எதிர்பார்ப்புகள் நிறை வேறவில்லை. இதன் காரணமாக இலங்கை தேசிய சங்கம் இச்சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இச்சங்கம் 1920 ஆம் ஆண்டு இச்சீர்திருத்தத்தின் கீழ் நடைபெற இருந்த தேர்தலையும் புறக்கணிக்க ஆயத்தமானது. இக்காலப்பகுதியில் இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான பாரிய போராட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படலாம் என ஆங்கிலேயர் அச்சமடைந்தனர். எனவே 1920 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தினை ஏற்றுக்கொள்வதானால் குறுகிய காலப்பகுதிக்குள் மற்றுமொரு சீர்திருத்தமொன்றை வழங்குவதாக ஆளுநர் இலங்கை தேசிய சங்கத்திற்கு உறுதியளித்தார். இதன் விளைவாகவே 1924 இல் மீண்டும் இன்னுமொரு அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்று கிடைக்கப்பெற்றது. ஆளுநர் வில்லியம் மனிங்கின் சிபாரிசின் பேரில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் டெவன்சியரால் ஒழுங்கமைக்கப்பட்ட இச்சீர்திருத்தம் மனிங் - டெவன்சியர் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் சட்டவாக்க சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் உத்தியோக சார்புள்ள 12 பேரும் உத்தியோக சார்பற்ற 37 பேரும் உள்ளடங்குவர். உத்தியோக

சார்பற்ற அங்கத்தவர்களுள் 29 பேர் வாக்குரிமை மூலம் தெரிவானதோடு எஞ்சிய 8 பேரும் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். வாக்குரிமை மூலம் தெரிவான 29 பேருள் 23 பேர் பிரதேசவாரித் தேர்தல் முறையின் மூலமும் 6 பேர் இனவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1924**




இச்சீர்திருத்தத்தின்கீழ் உத்தியோகச் சார்புள்ள 12 பேருடன் நியமன மூலம் தெரிவான 8 பேரும் இணைந்தாலும் வாக்குரிமை மூலம் தெரிவான 29 பேரையும் விட இவர்கள் சிறுபான்மையாகவே காணப்பட்டனர். ஆகவே சட்டவாக்க சபையினுள் பெரும்பான்மை பலம் ஆளுநருக்கு இல்லாதிருந்தது. இதன் காரணமாக அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்துவதில் ஆளுநர் மிகவும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1920 ஆம் ஆண்டு அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தினைப் போன்று 1924 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் கீழும் சட்டவாக்க சபைக்கான உறுப்பினர் தெரிவின்போது வாக்காளராவதற்குத் தேவையான தகுதி தொடர்பில் இலங்கையர் மத்தியில் அதிருப்தி நிலவியது. வாக்காளராவதற்கு யாதாயினும் ஒரு மொழியையேனும் எழுதவோ அல்லது வாசிக்கவோ முடியுமாயிருப்பதோடு சொத்து அல்லது வருமானம் பெறும் வழிமுறையொன்று காணப்படுதல் அவசியமாகும். இதனால் இந்நாட்டின் வாக்காளர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டே இருந்தது.


## 5.7 டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1931

மனிங் - டெவன்சியர் சீர்திருத்தத்தின் கீழான சட்டவாக்க சபையில் பெரும்பான்மை எண்ணிக்கையான ஆசனங்கள் இலங்கையருக்கு கிடைத்தமையால் ஆளுநருக்கு தந்திரோபாயமான முறையில் செயற்பட வேண்டி நேரிட்டது. இந்நிலைமையை இந்நாட்டு ஆளுநர்கள் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்ததன் விளைவாக இலங்கை வந்து இந்நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அவசியமான ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. டொனமூர் பிரபுவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இவ்வாணைக்குழு இலங்கைக்கு வந்து இலங்கையரின் கருத்துக்களைக் கேட்டறிந்து பரந்த விசாரணையொன்றினை மேற்கொண்டதன் பின் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தம் 1931 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அது டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

அடுத்ததாக நாம் டொனமூர் யாப்பு ஆலோசனைகள் சிலவற்றை வெவ்வேறாக ஆராய்ந்து பார்ப்போம்.

**அரசுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டமை**

டொனமூர் யாப்பின் கீழ் நடைமுறைக்கு வந்த சட்டவாக்க சபையானது அரசுக்கழகம் எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 61 ஆகும். இதில் 50 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையில் சர்வஜன வாக்குரிமை மூலமாகத் தெரிவானதோடு பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியாத சிறுபான்மை இனத்தவருக்காக ஆளுநரின் நியமனம் மூலம் 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அரச உத்தியோகத்தர்களாக அறிமுகப்படுத்தப்பட்ட எஞ்சிய மூவரும் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் எனும் அடிப்படையில் செயலாற்றியோர் ஆவர்.



அரசுக்கழகத்தில் பிரதான இடம் அதன் அங்கத்தவர்களின் வாக்குகளால் தெரிவான சபாநாயகருக்கே வழங்கப்பட்டது. அதன்படி டொனமூர் அரசுக் கழகத்தின் முதலாவது சபாநாயகராக A.F மொலமுரே நியமனம் பெற்றார். அரசுக் கழகத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

### சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை

1910 குறூ - மக்கலம் சீர்திருத்தத்தில் இருந்து சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்போது வாக்குரிமை பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அதற்கான தகைமைகளைப் பெற்றவர்கள் மொத்த சனத்தொகையில் வரையறுக்கப்பட்ட சிலரே ஆவர். வாக்காளராவதற்கான தகுதியைப் பெறவேண்டுமாயின் குறிப்பிட்டளவு கல்வித் தகைமையும் சொத்தும் அவசியமானவையாக இருந்தன. இதன் காரணமாக சாதாரண மக்களுக்கு வாக்குரிமை கிடைக்கப்பெறாததோடு வாக்காளர்கள் மொத்தச் சனத்தொகையில் 4 % மான சிறு தொகையினராக வரையறுக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு சாதாரண மக்களை அரசியல் களத்திலிருந்து விலக்கி வைத்திருக்கின்றமையானது அரசியலதிகாரிகளின் கவனம் அவர்கள்மீது திரும்பாமைக்குக் காரணமாய் உள்ள தென்பதை டொனமூர் ஆணைக்குழுவினர் சுட்டிக்காட்டினர். இதன் காரணமாக சாதாரண மக்களை அரசியல் ரீதியில் ஊக்கப்படுத்தி அவர்களின் நலனிற்காக அரசியல் அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்தது. இதன்படி 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. இதனை பொதுமக்கள் அடைந்த மாபெரும் வெற்றியாகக் கருத முடியும். இவ்விதமாக எவ்வித பேதங்களுமின்றி பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுள் வாக்குரிமையை வென்றெடுத்த முதலாவது ஆசிய நாடு என்ற பெருமை இலங்கைக்குக் கிடைத்தது.

### நிருவாகக்குழு முறைமை தோற்றுவிக்கப்பட்டமை

அரசுக்கழகம், சட்டவாக்கம், சட்ட நிருவாகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமாகச் செயலாற்றியது. இதற்குக் கையளிக்கப்பட்ட சட்டவாக்கக் கடமைகளை இந்நிறுவனம் கூட்டாக ஒன்றிணைந்து செயற்படுத்தியது. நிருவாக நடவடிக்கைகளுக்காக அரசுக் கழகம் ஏழு நிருவாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டது. இதற்கமைய தேர்தலின்பின் அரசுக் கழகத்திற்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் 61 பேருள் சபாநாயகர் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மூவர் தவிர்ந்த ஏனைய 57 பேரும் 7 நிருவாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அந்நிருவாகக் குழுக்கள் 7 கீழே தரப்பட்டுள்ளன.

- உள்நாட்டு அலுவல்கள்
- விவசாயமும் காணியும்
- உள்ளூராட்சி
- சுகாதாரம்
- கல்வி

- ❖ தொழில், கைத்தொழில், வர்த்தகம்
- ❖ போக்குவரத்தும் பொது வேலைகளும்

ஒவ்வொரு நிருவாகக் குழுவும் வெவ்வேறாக ஒன்றுகூடி அதற்கான தலைவரைத் தெரிவுசெய்யவேண்டியிருந்தது. அத்தலைவர்கள் அத்துறை சார்ந்த அமைச்சர்களாக நியமனம் பெற்றனர்.

இத்தலைவர்கள் 7 பேர் உட்பட அரச உத்தியோகத்தர்கள் மூவரும் அமைச்சர்களாகக் கருதப்பட்டனர்.

டொனமூர் யாப்பின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிருவாகக்குழு முறைமையின் காரணமாக இலங்கை பிரதிநிதிகளுக்கு நிருவாகம் தொடர்பான பயிற்சியொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றதோடு பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிய பயணத்தில் அது ஒரு முக்கிய மைல்கல்லாகவும் அமைந்தது.

**ஆளுநரும் அரச உத்தியோகத்தர்கள் மூவரும்**

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புகளுடன் ஒப்பிடும்போது டொனமூர் யாப்பின்கீழ் ஆளுநரின் அதிகாரங்கள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டிருந்தன. அரசின் சகல பொறுப்புக்களையும் தொடர்ந்தும் ஆளுநரிடம் கையளிக்க விரும்பாத டொனமூர் ஆணைக்குழுவினர் அதில் ஒரு பகுதியை இலங்கையரிடம் கையளிக்க விரும்பினர். அதன்படி அரசுக்கழகம் பிறப்பிக்கும் சட்டங்களுக்கு இறுதி அனுமதி வழங்கல், அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், பிரித்தானியப் பேரரசைப் பாதிக்கும் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற அதிகாரங்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.


இச்சீர்திருத்தத்தின்கீழ் பாதுகாப்பு, நிதிசார் நடவடிக்கைகள், சட்டம் போன்ற முக்கிய விடயங்கள் முறையே பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் எனும் அரச அதிகாரிகள் மூவரிடத்தின்கீழ் இருந்தன.

**இனவாரிப் பிரதிநிதித்துவ முறைமை நீக்கப்பட்டமை**

சட்டவாக்கச் சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கையில் 1833 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியர் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையையே நடைமுறைப்படுத்தினர். இது இலங்கையில் வெவ்வேறு இனங்களுக்கு மத்தியில் பேதங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாய் அமைந்த பிரதிநிதித்துவ முறையொன்றாகும். இதன் காரணமாக இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட வேண்டுமென 1931 ஆம் ஆண்டு வரையும் இலங்கையர்கள் குரல் எழுப்பினர். டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தினூடாக இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை பலப்படுத்தப்பட்டமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.

## 5.8 சோல்பரி அரசியல் யாப்பு 1947

### சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை


உரு 5.2 சோல்பரி பிரபு

டொனமூர் யாப்பின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட பத்து அமைச்சுக்களுள் ஏழு அமைச்சுக்களின் அதிகாரங்கள் இலங்கையருக்குக் கிடைத் ததெனினும் அரச அதிகாரிகள் மூவருக்கும் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் மூன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை, ஆளுநருக்கு கைய ளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் போன்றன தொடர்பில் இந்நாட்டுப் பிரதிநிதிகள் மகிழ்ச்சி கொள்ளவில்லை. இதன் காரணமாக டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறையிலிருந்த காலப் பகுதியிலேயே அவ்வரசியல் யாப்பினை மீள்பரி சோதனை செய்து புதிய அரசியல் யாப்பொன்றை பெற்றுக்கொள்ளுவதற்கு போராட்டங்கள் எழுந் தன. அப்போராட்டங்களின் முக்கிய நோக்கங்கள் சில பின்வருமாறு,

- ❖ அரச அதிகாரிகளிடத்தில் கையளிக்கப்பட்டிருந்த அமைச்சுப் பொறுப்புக்களை இலங்கையருக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ இலங்கைப் பிரதிநிதிகளுக்குக் கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- ❖ நிர்வாகக்குழு முறைமைக்குப் பதிலாக அமைச்சரவை (கெபினட்) முறை யொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல்.

இப்போராட்டங்களின்போது அமைச்சரவையும் அரசுக்கழக மக்கள் பிரதிநிதிகளும் முன்னணியில் நின்று செயலாற்றினர். இலங்கை தேசிய சங்கம் போன்ற அமைப்புக்கள் அமைச்சரவைக்கு ஆதரவை வழங்கின.

1939 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியதால், உலகப் போரின்போது இலங்கையரின் உதவி பிரித்தானியருக்குத் தேவைப்பட்டது. இதன்போது ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்ட நாடுகளுள் பிரித்தானியா குறிப்பிடத் தக்க சேவையாற்றியுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு அமைச்ச ரவை பிரித்தானியருக்கு ஆதரவு வழங்க முன்வந்ததோடு யுத்தம் முடிவடைந்ததன் பின் இலங்கையருக்கு கூடிய அதிகாரங்களைப் பெற்றுத்தரக்கூடிய அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றினைப் பெற்றுக்கொள்வது அவர்களின் நோக்கமாக அமைந்தது. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை இந்நாட்டு அமைச்சர்களுக்கு ஆளுநர் உள்ளிட்ட பிரித்தானிய அதிகாரிகளுடன் இணைந்து ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாக இலங்கையரின்

அரசியல் கோரிக்கைகள் தொடர்பாகப் பிரித்தானிய அதிகாரிகளிடத்தில் நெகிழ்வு மனப்பாங்கொன்று ஏற்பட்டமை தெரிகின்றது.

இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் பிரித்தானிய அரசின் கொள்கைகளைத் தெளிவுபடுத்தும் அறிக்கையொன்று 1943 ஆம் ஆண்டு மே மாதம் இந்நாட்டின் ஆளுநரால் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் தொடர்பான பொறுப்புக்களை இலங்கையரிடம் கையளிக்கும் சீர்திருத்தமொன்றினை வழங்குவதற்குப் பிரித்தானியா நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கூற்றின்படி பொருத்தமான அரசியல் யாப்புச் சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கான பொறுப்பு அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசியல் யாப்புச் சட்டமூலத்தை ஒழுங்கமைக்கும்போது அரசியல் யாப்புத் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றிருந்த பல்கலைக்கழக உபவேந்தரான ஐவர் ஜெனிங்ஸ் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அமைச்சர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அமைச்சரவையின் சட்டமூலம் 1944 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் தயாரித்து முடிக்கப்பட்டது. அமைச்சரவையின் அரசியல் யாப்புச் சட்ட மூலத்தை ஆராய்ந்து இந்நாட்டின் சிறுபான்மையினத்தவர் உட்பட வெவ்வேறு குழுக்களுடன் கலந்துரையாடி பிரித்தானிய அரசுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதற்காக 1944 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பிரித்தானிய அரசினால் விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. சோல்பரி பிரபுவின் தலைமையிலான அவ்வாணைக்குழு சோல்பரி ஆணைக்குழு என அழைக்கப்பட்டது.

1944 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சோல்பரி ஆணைக்குழு இந்நாட்டுக்கு வந்து தகவல் தேடியறிந்து 1945 இல் ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு 1947 முதல் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது சோல்பரி அரசியல் யாப்பு என அழைக்கப்பட்டது.

**சோல்பரி அரசியல் யாப்பின் விசேட பண்புகள்**

- ❖ ஆளுநர் எனும் பதவி நீக்கப்பட்டு ஆளுநர் நாயகம் எனும் பதவி தோற்றுவிக்கப்பட்டமை.
- ❖ இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் தோற்றுவிக்கப்பட்டமை. (பிரதிநிதிகள் சபை, செனட் சபை)
- ❖ பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டமை.
- ❖ அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டமை.

## ஆளுநர் நாயகம்



உரு 5.3 ஹென்றி மென்க் மேசன் மூர்

இதுவரை நடைமுறையிலிருந்த ஆளுநர் பதவி சோல்பரி யாப்பின் கீழ் நீக்கப்பட்டது. இவ்வரசியல் யாப்பின் கீழும் பிரித்தானிய மகாராணியே தொடர்ந்தும் இலங்கையின் தலைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஆளுநர் நாயகம் பதவி அறிமுகப் படுத்தப்பட்டது. பிரித்தானிய மகாராணியால் ஆளுநர் நாயகம் நியமிக்கப்பட்டார். அவருக்கு சட்டவாக்கம், சட்ட நிருவாகம், நீதிசார் துறைகளில் அதிகாரங்கள் பல கிடைக்கப் பெற்றாலும் பிரதமரின் ஆலோசனைப்படியே ஆளுநர் நாயகம் செயற்பட வேண்டி யிருந்தமையால் அப்பதவி பெயரளவு நிறைவேற்றுத்துறை சார்ந்த பதவியாகவே அமைந்தது. அவ்வேளை ஆளுநராகப் பதவி வகித்த சேர் ஹென்றி மென்க் மேசன் மூர் இந்நாட்டின் முதல் ஆளுநர் நாயகமாகவும் பணியாற்றினார்.

## பாராளுமன்றம்

சோல்பரி அரசியல் யாப்பிற்கமைய சட்டத்துறை சார் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனம் பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது. பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை, செனட் சபை எனும் இரு சபைகளால் ஆனது. எனவே இது இரு சபை பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது.




உரு 5.4 பழைய பாராளுமன்றம்

பிரதிநிதிகள் சபை பாராளுமன்றத்தின் முதலாம் மன்றமாக அமைந்ததோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் 101 பேரை உள்ளடக்கியிருந்தது. அதில் 95 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையில் பொதுமக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுவதுடன் எஞ்சிய 6 பேரும் அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ள முடியாத சிறுபான்மையோருக்காக பிரதமரின் ஆலோசனைக்கு அமைய ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டோராவர். பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.


பாராளுமன்றத்தின் இரண்டாம் மன்றமான செனட் சபை மூதவை எனவும் அழைக்கப் பட்டது. இது 30 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. 15 பேர் பிரதமரின் ஆலோச னைக்கு அமைய ஆளுநர் நாயகத்தால் நியமனம் செய்யப்பட்டனர். எஞ்சிய 15 பேரும் பிரதிநிதிகள் சபையின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுவர். செனட் சபையின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும்.

### பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை



உரு 5.5 முதலாவது அமைச்சரவை

சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் நிறைவேற்ற திகாரம் எனும் சட்டவாக்க அதிகாரம் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப் பட்டது. அமைச்சரவையில் தலைமைத்துவம் பிரதமருக்குக் கிடைத்தது. பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மையோரின் நம்பிக்கையைப் பெற்ற நபர் ஆளுநர் நாயகத்தால் பிரதமர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார். பிரதமரின் ஆலோச னையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் அமைச்சர் கள் நியமனம் செய் யப்படுவர் பிரதிநிதிகள் சபை யின் ஆளுங்க ட்சி பிரதிநிதிகள் மற்றும் செனட் சபை பிரதிநிதிகளிலிருந்து அமைச்சரவைக்கான அமைச்சர்கள் தெரிவுசெய்யப்படுவர். செனட் சபையிலிருந்து குறைந்தபட்சம் இருவராவது அமைச்சரவையில் இடம்பெற வேண்டும்.



உரு 5.6 டி.எஸ். சேனாநாயக்க அவர்கள்

அதேவேளை அதில் ஒருவர் கட்டாயம் நீதியமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என சோல்பரி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அமைச்சரவை கூட்டாகப் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியிருந்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

### அரசாங்க சேவை ஆணைக்குழு

சோல்பரி யாப்பின்கீழ் நீதிபதி,கணக்காய்வாளர், நிரந்தர செயலாளர் போன்ற உயர் அதிகாரிகள் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப் படுவர். இது தவிர கீழ்நிலை அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அரசாங்க சேவை ஆணைக்குழுவானது அங்கத்தவர்கள் மூவரை உள்ளடக்கியிருந்தது.

### நீதிச்சேவை ஆணைக்குழு

சோல்பரி யாப்பின் கீழ் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதியரசர் கள் ஆகியோரை நியமித்தல் போன்றன பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் மேற்கொள்ளப்படும். ஏனைய கீழ்நிலை நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை நியமித்தல், நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இது பிரதம நீதியரசர் உட்பட மேலும் இரு நீதியரசர்களை உள்ளடக்கியிருந்தது.



**செயற்பாடு**

கீழே தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பிரித்தானியரின்கீழ் நடை முறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான தகவல்களடங்கிய பக்கப்புரட்டியொன்றினைத் தயாரிக்க.

1. பிரித்தானியரின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள்.
2. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களில் உள்ளடங்கியுள்ள முக்கிய ஆலோசனைகள்.
3. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் நன்மை, தீமைகள்